## நீலகிரி மாவட்ட வேளாண் வானிலை முன்னறிக்க மடல்

**வெளியீடு- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை. & இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்**

**தேதி 28.06.16**

சமீபகாலத்திற்கான வானிலை அறிக்கை:-

1. சமீப காலத்தில் மாவட்டத்தில் மிதமான மழை பெறப்பட்டது.
2. தட்பவெப்பம் மற்றும் காற்றின் ஈரப்பதம் - அதிகபட்ச வெப்பநிலை $17^o$ - $18^o$ செ. மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை $10^o$-$12^o$ செ. ஆக இருந்தது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 85-96% மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 88% - 96% இருந்தது. காற்றின் வேகம் 25-36 (கிலோ.மீ./மணிக்கு).

| வானிலை குறிப்புகள் | 29.06.16 | 30.06.16 | 01.07.16 | 02.07.16 | 03.07.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 15 | 10 | 4 | 4 | 8 |
| அதிகபட்ச தட்ப வெப்பம் ($^0$ செ.) | 17 | 17 | 17 | 17 | 17 |
| குறைந்தபட்ச தட்ப வெப்பம் ($^0$ செ.) | 11 | 11 | 11 | 11 | 11 |
| மேகமூட்டம் (ஒக்டா) | 7 | 7 | 7 | 7 | 7 |
| அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 92 | 92 | 92 | 92 | 92 |
| குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 94 | 94 | 94 | 94 | 94 |
| காற்றின் வேகம் (கிலோ.மீ./மணிக்கு) | 27 | 27 | 27 | 27 | 27 |
| காற்றின் திசை | 300 | 300 | 300 | 300 | 300 |

**வானிலை சார்ந்த சாகுபடி குறிப்புகள்**

- மாவட்டத்தில் வரும் நாட்களில் மிதமான மழை வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.
- நீலகிரி மாவட்டத்தில் தொடர் மழை எதிர்பார்க்கப் படுவதால், உரிய வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- தோட்டக்கலை பயிர்களின் நடவின் போது, ஹெக்டேருக்கு 12 டண் நன்கு மட்கிய தொழு உரம் இடவேண்டும்.
- மேராக்காய் நடவின் போது, 6 அடி x 8 அடி இடைவெளியில் 45 செமீ கன அளவு குழியில், குழிக்கு 3 காய் வீதம், 10 கிலோ தொழுஉரம், 250 கிராம் யூரியா, 500 கிராம் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 500 கிராம் பொட்டஸ் இட்டு நடவு செய்யவும்.
- கார்னேசன் பயிரில் ப்யூசேரியம் அழுகல் நோயை கட்டுபடுத்த டெபுகொனோசோல் 50 %, ட்ரைப்ளாக்ஸிஸ்டாரபிண் 25 % கலவை மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கரைத்து வேர்பகுதியில் ஊற்றவும்.
- தொடர் மழையின் காரணமாக, கோஸ் மற்றும் காலிபிலவரில் தலை அழுகலை தடுக்க, காப்பர் ஆக்ஸி குலோரைடு 2 கிராம் லிட்டர் தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை